**முதன்மை மாவட்ட நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.**

**முன்னிலை : திருமதி. G. சுபத்திராதேவி., எம்.எல்.,**

**முதன்மை மாவட்ட நீதிபதி, கடலூர்.**

**2026-ஆம் ஆண்டு, ஜுன் மாதம் 1-ஆம் நாள் திங்கட் கிழமை**

**Tr.O.P. No.219/2025**

**(TN CD 01-011428-2025)**

தமிழ்செல்வன், த/பெ. தர்மன், வயது 24, வசிப்பிடம் கதவு எண்.47/4, தெற்கு தெரு, வேப்பூர், வேப்பூர் வட்டம், கடலூர் மாவட்டம். .. மனுதாரர்

/எதிராக/

1. வீரப்பத்திரன், த/பெ. காந்திகவுண்டர், வயது 40, வசிப்பிடம் கதவு எண்.110, தெற்கு தெரு, வேப்பூர், வேப்பூர் வட்டம், கடலூர் மாவட்டம்.
2. மகாலெட்சுமி, க/பெ. ராமஜெயம், த/பெ. தர்மன்,வயது 22, வசிப்பிடம் கதவு எண்.464/2, வடக்கு தெரு, தொண்டங்குறிச்சி கிராமம், திட்டக்குடி வட்டம், கடலூர் மாவட்டம்.
3. லதா, க/பெ. காண்டிமன், த/பெ. மஞ்சப்ப சேர்வை, வயது 49,வசிப்பிடம் கதவு எண்.121, வடக்கு தெரு, தொண்டங்குறிச்சி கிராமம், திட்டக்குடி வட்டம், கடலூர் மாவட்டம்.
4. பெரியம்மாள், க/பெ. ராமச்சந்திரன், த/பெ. மஞ்சப்ப சேர்வை,வயது 54, வசிப்பிடம் கதவு எண்.47, தெற்கு தெரு, அரியநாச்சி கிராமம், திட்டக்குடி வட்டம், கடலூர் மாவட்டம்.
5. ராஜகுமாரி, க/பெ. சந்திரன்,க/பெ. மஞ்சப்ப சேர்வை, வயது 47, வசிப்பிடம் வேப்பூர் புது ரோடு எண்.273(1), வேப்பூர் வட்டம், கடலூர் மாவட்டம் .. எதிர்மனுதாரர்கள்

விருத்தாசலம், முதன்மை சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அசல் வழக்கு எண்.391/2024 என்ற வழக்கை, விருத்தாசலம், 3-வது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்திற்கு மாற்றி, விருத்தாசலம், 3-வது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அசல் வழக்கு எண்.339/2024 உடன் இணைத்து நடத்த உத்தரவிடக்கோரி, மனுதாரர், உரிமையியல் விசாரணை முறைச் சட்டம் பிரிவு 24-ன் கீழ் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

இம்மனு 17.11.2025 அன்று தாக்கல் செய்யப்பட்டு 15.12.2025 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. இம்மனுவில் நீதிமன்றக் கட்டணம் ரூ.50/- செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனுவானது என் முன்பு 29.04.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஜி.செல்வம் அவர்களும், 4-வது எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.கே.பசுபதி ராஜா அவர்களும் முன்னிலையாகியும், 4-வது எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் இல்லை என்று மேற்குறிப்பு செய்தும், 1, 2, 3 மற்றும் 5 எதிர்மனுதாரர்களுக்கு அழைப்பாணை சார்வு செய்தும், 1 ,2,3 மற்றும் 5 எதிர்மனுதாரர்களை இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால், 1,2,3 மற்றும் 5 எதிர்மனுதாரர்களைத் தோன்றாத் தரப்பினர்களாக கருதப்பட்டும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், வழக்காவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பின்வருமாறு வழங்கும் ..

## உத்தரவாணை

1. இம்மனுவை அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.
2. விருத்தாசலம், முதன்மை சார்பு நீதிபதி அவர்கள், அசல் வழக்கு எண்.391/2024-ஐ, விருத்தாசலம், 3-வது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்திற்கு மாற்ற வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.
3. விருத்தாசலம், 3-வது கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்கள், மேற்படி அசல் வழக்கு எண்.391/2024 -ஐ பெற்று, விருத்தாசலம், 3-வது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அசல் வழக்கு எண்.339/2024 என்ற வழக்குடன், வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலைக்கேற்ப இணைத்து விசாரணை நடத்தி, உரிய சட்டத்தின்படி வழக்குகளை முடிக்கவும் உத்தரவிடப்படுகிறது.
4. செலவுத் தொகை இல்லை.

என் கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் 2026-ஆம் ஆண்டு ஜுன் மாதம் 01-ஆம் நாள் என்னால் இடப்பட்டது.

SUBATHIRA DEVI G Digitally signed by SUBATHIRA DEVI G Date: 2026.06.09 15:14:27 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

கடலூர்.